# மண்மாற்றம் நாவலில் தோட்டப்புற இந்தியர்களின் சமூக அரசியல் வாழ்க்கைப் போராட்டங்களின் வரலாறு

# Historical Socio-Political Struggles of Indian Rubber Plantation Worker as Portrayed in the novel Mann Maatram

சங்கீதா த/பெ சந்திரகுமாரன் / Sangeetha D/O Sandrakumaran[1]

மனோஷ் த/பெ இராமா / Mannosh S/O Rama[2]

## Abstract

This article explores the socio-political struggles faced by the Indian workers in rubber plantations in the pre- and post-independent Malaya as depicted in the novel *Mann Maatram* by *R. Mutharasan*. This essay highlights several historical aspects of the Malaysian Indians that are stated in the novel: occupational chances for the youngsters, problems in education, lifestyles, the residential struggles and salary issues among the Indian rubber plantation workers in the pre- and post-independent Malaya.

Date of submission: 2020-04-11
Date of acceptance: 2020-04-20
Date of Publication: 2020-07-20
Corresponding author's
Name: Mannosh S/O Rama
Email: mannosh.mr@gmail.com

**Key Words:** life struggles, socio-political, Malaysian Indians, Rubber plantation.

### நாவலாசிரியரின் விவரக்குறிப்பு

தனது இளம் பருவம் முதல் எழுத்துத்துறையில் தீவிரமாக ஈடுபட்டு வரும் இரா.முத்தரசன், சிறுகதைகள், நாவல், கட்டுரைகள் எனப் பல முனைகளில் எழுதி வருபவர்.இலண்டன் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைப் பட்டதாரியான இவர், வழக்கறிஞராகவும் பணியாற்றி, பின்னர் கோலாலம்பூர், மலாயாப்பல்கலைக்கழகத்தில் வணிகவியல் துறையில் எம்.பி.ஏ முதுகலைப் பட்டம் பெற்றவர். 1988 ஆம் ஆண்டில் "இதுதான் முதல் இராத்திரி" என்ற தலைப்பில் 10 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பை வெளியிட்டார். இவரது இந்த 'மண்மாற்றம்' நாவல், அஸ்ட்ரோ தொலைக்காட்சி நிறுவனமும் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் இணைந்து 2004 ஆம் ஆண்டில் நடத்திய நாவல் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்றதாகும். 2012 ஆம் ஆண்டு முதல், இணையத்திலும், செல்பேசி குறுஞ்செயலி தளத்திலும் இயங்கிவரும் "செல்லியல்" என்ற தகவல் ஊடகத்தின் இணைத் தோற்றுநரான இரா.முத்தரசன், அந்த ஊடகத்தின் நிருவாக ஆசிரியராகவும் பணியாற்றி வருகின்றார். (Mutharasan, 2017, p.9)

### மண்மாற்றம் நாவலின் கதைச்சுருக்கம்

1980 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் பல இரப்பர், செம்பனைத் தோட்டங்கள் மேம்பாடு என்ற பெயரில் வீடமைப்புத் திட்டங்களாகவும், கோல்ப் விளையாட்டுத் திடல்களாகவும், மாபெரும் நவீனத் திட்டங்களாகவும் உருமாற்றக் கண்டண. புதிய விமான நிலையம், புத்ரா ஜெயா நகர், சைபர் ஜெயா போன்ற பிரம்மாண்டமான நவீனத் திட்டங்கள் இன்று அமைந்திருக்கும்

[1] The author is Bachelor Of Education In Tamil Language Student, Sultan Idris Education University, Perak, Malaysia.sangeethageetha0109@gmail.com

[2] The author is Bachelor Of Education In Tamil Language Student, Sultan Idris Education University, Perak, Malaysia. mannosh.mr@gmail.com

நிலப்பகுதிகள் ஒரு காலத்தில்தோட்டங்களாக இருந்தவைதான். அத்தகைய ஒரு தோட்டம் உருமாற்றம் கண்டபோது அதில் பாதிக்கப்படும் ஒரு குடும்பத்தின் கதையைக் கூறுகிறது ‘மண்மாற்றம்’. நமது மூதாதையர்கள் தமிழ் நாட்டிலிருந்து மலாயாவிற்கு வந்து இரப்பர் தோட்டங்களில் தஞ்சமடைந்த சம்பவங்களையும், தோட்டத்திலிருந்து மேம்பாடு என்ற பெயரில் வெளியேற்றப்பட்ட குடும்பங்களின் சோகப் பின்னணிகளையும், இவற்றுக்கிடையில், அத்தகைய பாதிப்புகளைப் படிக்கல்லாகப் பயன்படுத்தி முன்னேறத் துடிக்கும் இளைய சமுதாயத்தினரின் எண்ணங்களையும் நாவலின் கதைக்களமும், அதில் வரும் கதாபாத்திரங்களும் பிரதிபலிக்கின்றன. இதனிடையில், இந்நாவல் மலேசிய இந்தியர்களின் சமூக அரசியல் வாழ்க்கைப் போராட்டங்கள் வரலாற்றை.

## இளைஞர்களின் வேலை வாய்ப்புத்திண்டாட்டம்

இன்றைய காலக்கட்டத்தில் வேலைவாய்ப்பு என்பது ஒரு பிரச்சனையாக உள்ளது காரணம் தொழில்துறையில் ஏற்பட்டிருக்கும் அபரிதமான வளர்ச்சி மற்றும் அது சம்பந்தமான மாற்றங்களும், எதிர்பார்ப்புகளும்தான் *(Arumugam, 2017).*

தொழில்துறையில் ஏற்படும்புரட்சியால் நாளுக்குநாள் வேலைவாய்ப்புகள்பெருகிக்கொண்டேதான்இருக்கிறது. நாம்தான் நம்மைத் தயார் படுத்திக் கொள்ளவதில்லை. வாழ்க்கையில் தேடல் மிக அவசியம். தேடல் இல்லாத வாழ்க்கை அர்த்தமற்றது. இந்நாவலில் மாரிமுத்துவின் மூத்த மகனாகிய இராமன் இதனைக் குறிபிடுக்கிறான்.

> *இராமன் : நானும் அடுத்த கட்டத்துக்குத் தாண்டறேன். இந்த நாட்டில என்னை மாதிரி இந்திய இளைஞர்களுக்கு முறையான வாய்ப்பு இல்லை. எவ்வளவுதான் முயற்சி செஞ்சாலும் திறமையா இருந்தாலும் இங்கே முதலிடத்துக்கு வர முடியாதுன்னு என் மனசுக்குப் படுது.(Mutharasan, 2017, p.121)*

இன வகைப்பாட்டினால் தன் சொந்த நாட்டில் முன் வருவதற்கான வாய்ப்புக் குறைவு என்பதை இராமன் இவற்றுள் தெரிவிக்கின்றான். பல நாட்கள் தோட்டத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மாரிமுத்துவினுடைய குடும்பம் வெளியுலகத்தை நன்றாக அறியப்படவில்லை. ஆனால், இராமன் அவற்றை நன்கு புரிந்துள்ளான். இன வகைப்பாடு பிரிச்சனையைஅறிந்து கொண்ட இராமன், இதனால் வேலை வாய்ப்புக்கும் பெரும் தடையாக இருப்பதையும் அறிந்து கொண்டான். ஆகையால், வெளிநாட்டில் வேலை செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தான். இதனையொட்டி மலேசிய இந்தியர்கள் வரலாற்றில் காணப்படும் இன்னல்கள் என்னவென்றால் முற்காலத்தில் இந்தியர்கள் தோட்டத்தில் அடிமைத்தனமாக இருந்துள்ளார்கள்; காலம் கடந்தாலும் மக்கள் அனைவரும் ஒரே எண்ணத்தைக் கொண்டிருப்பார்கள் என்ற ஓர் அலட்சியமான எண்ணத்தைக்கொண்டிருந்தார்கள்.

> *இராமன் : என்ன மாதிரி இந்திய இளைஞர்களோட நிலைமையையும் கொஞ்சம் நினைச்சு பாருங்க! அரசாங்க வேலையிலும் முறையான வாய்ப்போ அதுக்குரிய புரமோஷனோ கிடைக்கறதில்ல. (Mutharasan R, 2017, P. 125)*

இக்கூற்று மலேசியா சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய இளைஞர்களுக்கு அரசாங்கத்திலும் அதிக வாய்ப்புகளை வழங்குவதில்லை என்பதை இந்நாவல் வரிகளின் மூலம் வாசகர் அறியலாம். தனியார் நிறுவனங்களிலும் வாய்ப்புகள்குறைவு காரணம் அவைச் சீனர் இனத்தின் கீழ் உள்ளது. சுய தொழில் செய்வதற்க்கும் இந்திய இளைஞர்களுக்குப் போதுமான பண வசதில்லை. ஆகையால், வெளிநாட்டிற்க்குச் சென்று பணி புரிக்கின்றனர் நமது இந்திய இளைஞர்கள். இவைதான் இராமனும் இக்கதையில் செய்துள்ளான். இதுவே அவன் அச்சிக்கலுக்குத்தீர்வுக்கண்ட ஒரு முடிவு. தானும் தன் குடும்பமும் அடுத்து நிலைக்கு அடைவதற்கு இராமன் இம்முடிவை எடுத்துள்ளான். இந்திய இளைஞர்கள்

வெளிநாட்டில் வேலை செய்து, மீண்டும் தன் தாய் நாட்டிற்குச் சேவை செய்வது அவசியம். இக்கதையில் இராமன் இக்கூற்றை தன் தந்தையிடம் கூறியுள்ளான்; வாசகருக்கு நாவலாசிரியர் நன்றாக உணர்த்தியுள்ளான்.

இக்காலத்தில் இப்பிரச்சனைக்குத் தீர்வு என்னவென்றால் இந்திய இளைஞர்கள் கடும் உழைப்பாளியாக இருப்பதைவிட அறிவுப்பூர்வமான உழைப்பாளியாக இருப்பது அவசியம். பணத்தைச் சேமித்துச் சுயத்தொழிலில் ஈடுபடுவது சிறந்தது. படித்த படிப்பிற்குச் வேலை தேடுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு இக்காலத்தில். இந்திய இளைஞர்கள் தன்னுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்குத், தன்னை நாட்டின் சூழ்நிலைக்கேற்ப மாற்றிக்கொள்வது அவசியம் என்பதைனை நினைவில் இருப்பது நல்லது.

## குடியிருப்பு மற்றும் வருமானப் போராட்டம்

மலேசிய இந்தியர்கள் தோட்டத் தொழிலில் மாதச் சம்பளத்திற்குத் போராடியுள்ளனர். காலம் மாறியப்பின், தோட்டம் உறுமாற்றம் நடந்தேறியப் பின் நஷ்ட ஈடு கேட்கும் காலமும் வந்தது. இந்தக் கதையில் நாவலாசிரியர் இவ்விரு போராட்டங்களின் வரலாற்றைக்கருதியுள்ளார்.

> *தோட்டத்து மக்களுக்கு மாதச் சம்பளம் கொடுங்கள் காலங்காலமாக யூனியன்களும் தொழிலாளர் அமைப்புகளும் குரல் கொடுத்துக் கொண்டுருந்த காலம் மாறிப்போய், இப்போதோ தோட்டத்திலிருந்து வெளியேற்றப்படும் மக்களுக்கு நஷ்ட ஈடு கொடுங்கள் என்று கெஞ்சிக் கேட்கின்ற நிலைமை வந்துவிட்டது", மாரிமுத்து யோசித்தார் (Mutharasan. R, 2017, P.54).*

மலேசிய இந்தியர்கள் வரலாற்றில், 1928 ஆம் ஆண்டு முதல் நாள் ஒன்றுக்கு 50 காசு சம்பளம் தந்து வந்த தோட்ட நிர்வாகம் 1937 ஆம் ஆண்டு இறுதியில் பத்து காசு குறைத்து நாள் ஒன்றுக்கு 40 காசு மட்டுமே தரப்படும் எனத் தெரியவந்தது (Krishnavel, 2008). சீனிவாசசாஸ்திரியின் ஆலோசனையின் பேரில் இந்தச் சம்பளக்குறைப்புச் மேற்கொள்ளப்பட்டதாக மலாயாத் தோட்ட முதலாளிகள் சங்கம் அறிவித்துள்ளது. தொடர்ந்து, 1940 ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 50 காசு சம்பளம் பெற்ற தோட்டத் தொழிலாளர்கள் 1954 இல் 2 வெள்ளி 40 காசு பெற்றனர். 1970இல் நாள் ஒன்றுக்கு 3 வெள்ளி 60 காசு சம்பள உயர்வு பெற்றிருக்கின்றனர். அதன் பின்னர், நாள் ஒன்றுக்கு 7 வெள்ளி 90 காசு வீதம் பெற்றிருக்கின்றனர். 10 கிலொவுக்கு மேல் கொண்டு வரப்படும் இரப்பர் பாலுக்கு அளவுக்கு ஏற்றபடி ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்கு மாத வருமானம் அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்பது தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நீண்டகாலப் போராட்டமாக விளங்கியுள்ளது. தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தை வெற்றிகரமாக வழிநடத்திய டாக்டர் பி.பி. நாராயணன் 1993 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற பின்னர் அச்சங்கத்தின் பொதுச் செயலாளராக ஜி. சங்கரன் பொறுப்பேற்றுத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தைச் சகத்தோழர்களோடு வழிநடத்தி வந்துள்ளார் (Chanthiran, 1995, p.66). பல தோட்டத் தொழிலாளர்கள் பிரஜா உரிமை எடுப்பதில் அதிக நாட்டத்தைக் காட்டாமல் இருந்ததால் 1969ஆம் ஆண்டில் 60 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவிற்கு திரும்பிவிட்டதாக ஒரு புள்ளிவிபரக் குறிப்பு தெரிவித்துள்ளது. பிரஜா உரிமை இல்லாத காரணத்தால் இந்தியர்களின் குடியிருப்புக்கும் ஒரு கேள்விக்குறியாயிற்று. இதனுடைய விளைவு, 1970ஆம் ஆண்டில் 159,795 எண்ணிக்கையிலிருந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1980ஆம் ஆண்டில் 152,218 ஆகக் குறைந்தது.

குடியிறுப்புப் போராட்டத்திற்கான இந்நாவலில் காணப்படும் சம்பவம் என்னவென்றால், தோட்டம் உறுமாற்றத்தால் அரசாங்க நிர்வாகிகள் வெலிங்டன் தோட்ட மக்களுக்கு வீடு அமைத்துத் தருவதாகக் கூறியிருந்தனர். ஆனால், அவ்வீட்டின் விலை இரண்டு லட்சம் விலையைக் கொண்டிருப்பதாகக்

குறிப்பிட்டுள்ளனர் காரணம் அவைக் கோல்ப் கோர்சுடன் அமைக்கப்பட்டுள்ளன. இக்கதையில் மாரிமுத்து அவற்றிக்கு ஒப்புக்கொள்ளவில்லை. அதற்குமாறாக மலிவு வீடு கட்டித்தருமாறு வலியுருத்தினார். இதை அறிந்துதான் அரசாங்கம் இவர்களுக்கு நீண்ட வீடுகள் அமைத்தனர். மலேசிய இந்தியர்களின் வரலாற்றில் நீண்ட வீடு (லயம்) என்பது இரப்பர்த் தோட்டங்களுக்கு மத்தியில் கட்டப்பட்ட வசதி குறைந்த வரிசை விடுகளாகும் (Chanthiran, 1995, p.78). இவற்றுள் இந்திய தொழிலாளர்கள் தங்கி சீனர்களை விட குறைந்த ஊதியத்திற்கு வேலைகளைச் செய்தவர்கள். முன்பு கூறியப்படி 1928ஆம் ஆண்டில் இந்தியத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 50 காசு சம்பளம் தரப்பட்டது. ஆனால், சீனர்களுக்கு நாள் ஒன்று 60 காசும் சில இடங்களில் 70 காசும் வழங்கப்பட்டது. ஆகையால், இந்தியத் தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வும் பிற வசதிகளும் வழங்க வேண்டும்மென மலாயா இந்தியர் சங்கத் தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதுவே ஓர் ஆதாரம் மாரிமுத்து குறைந்த ஊதியத்திற்கு வேலைச் செய்துள்ளார் என்பதற்கு. ஆகவே, அவர் மலிவான வீடு வேண்டுமெனவும் வெலிங்டன் மக்களுக்கு ஏற்ப குடியிருப்புப் பகுதியும் வேண்டுமெனவும் கோரிக்கையிட்டு அரசாங்கத்திடம் போராடியுள்ளார்.

> *மாரிமுத்து : அது சரி, வீடு சலுகை விலையில் தர்றோம்னு சொன்னீங்களே என்ன விலைன்னு கொஞ்சம் சொல்றீங்களா?*
>
> *நிர்வாகி : இந்த வீடுங்கள்ளாம் கோல்ப் கோர்சோட கட்டறதால விலை கொஞ்சம் அதிகமாஇருக்கும். எப்படியும் சுமார் இரண்டு லட்ச வெள்ளிக்கும் மேல இருக்கும்.*
>
> *மாரிமுத்து : இந்த வயசில நாங்க போயி ஒரு லட்சம் ரெண்டு லட்சம்னு எப்படியா வீடு வாங்கறது. எஸ்டேட்டு கூலிக்காரங்க எங்கக்கிட்ட காசு என்ன கொட்டியா கெடக்கு. இல்ல எங்களுக்கு எவனாச்சும் லோந்தான் தருவானா? ஏன் எங்களுக்காக மலிவு வீடு கட்டித் தரக் கூடாதா?*
>
> *நிர்வாகி : இந்த மாதிரி ஹை கிளாஸ் எடத்துக்கு மலிவு வீடெல்லாம் சரிப்பட்டு வராதுன்னுதான் உங்களுக்கு ரூமா பாஞ்சாங் கட்டித் தர்றோம். (Mutharasan, 2017. P.83)*

## மலேசியா இந்தியர்களின் தோட்டப்புறக் கல்வி

மலேசியாவில்தமிழ்க்கல்விக்கென்று தனி வரலாறு உண்டு. மலேசியாவில் தமிழ்ப்பள்ளிகளுக்கு நீண்ட நெடிய பாரம்பரியம் உண்டு. மலேசியாவில் தமிழ்ப்பள்ளிகள் மொழி வளர்ச்சியிலும் சமுதாய மேம்பாட்டிலும் ஆற்றியுள்ள பங்களிப்புகள் நிறைய உண்டு. மலேசியாவில் தமிழ்க்கல்விக் கற்று வாழ்வில் முன்னேறியவர்கள் பற்றி ஆயிரமாயிரம் வெற்றிக் கதைகள் உண்டு.

1816 மலேசியக் கல்வி வரலாற்றில் ஒரு முக்கியமான ஆண்டு. அன்றைய காலத்தில் மலாயாவில் ஆட்சி நடத்திய பிரிட்டிசார் அரசாங்கம் பினாங்கில் ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடங்கியது. பினாங்கு பொதுப்பள்ளி அல்லது ஆங்கிலத்தில் 'Penang Free School' என்பதுதான் அந்தப் பள்ளி. ஆங்கிலம் வழி கல்விக் கற்க இந்தப் பள்ளி உருவாக்கப்பட்டது. இந்தப் பள்ளியில் தான் முதன்முதலாக, நமது அன்னை மொழியாம் தமிழ் மொழிக்காக ஒரு தமிழ் வகுப்பு தொடங்கப்பட்டது. 21.10.1816 நாளன்று அன்றைய Penang Free School பள்ளியின் தலைவராக இருந்த சர் ரெவரண்டு அட்சிங்ஸ் என்பவர் இந்தத் தமிழ் வகுப்பைத் தொடங்கியதாக வரலாறு கூறுகின்றது.

1901ஆம் ஆண்டில் கூட்டரசு மலாய் மாநிலங்களின் (Federated Malay States) கல்விக் கண்காணிப்பாளர் ஜே.டிரைவர் தாய்மொழிக் கல்வியை விரும்பவில்லை. அதே ஆண்டில் சிலாங்கூர் மாநில ரெசிடெண்டாயிருந்தகீ.பி திரேச்சர் ( கீ.பி ஜிஸிணிகிசிபிணிஸி ) வெளியிட்ட அறிக்கையில் மலாய்ப் பள்ளிகளுக்கான கல்விச் செலவு தவிர மற்ற இனத்தவரின் தாய்மொழிக் கல்விக்கு அரசு

பொறுப்பேற்காது என்று அறிவித்தார்.

இக்காலக்கட்டதில் குழந்தைக் காப்பகங்கள், கோயில்கள், தொழிற்சாலைகளின் பகுதிகள், நாடக மேடைகள் போன்ற இடங்களில் தமிழ்ப் பள்ளிகள் பெயர் அளவில் நடத்தப்பட்டன. ஒரே நிருவாகத்தின்கீழ் இயங்கும் தோட்டப் பிரிவுகளிலும் தனித்தனிப் பள்ளிகள் அமைக்கப்பட்டன. இக்காலக்கட்டதில் மாணவர்கள் கல்வியில் பின் தங்கிய காரணங்கள் :

- கல்வி வசதிகள் குறைந்த குறிப்பாகக் கற்றல் கற்பித்தலுக்குப் போதுமான வசதியின்மை
- குறைந்த தேர்ச்சி அடைவு நிலைகள்
- மொழிக் குழப்பம்
- பன்மை வகுப்புகள்
- போக்குவரத்து வசதிகள் இன்மை
- கட்டட, வெளிக் கட்டமைப்பு வசதிகள் குறைந்த சிறிய பள்ளிகள்

இவ்வரலாற்றையொட்டி இந்நாவலில், ‘தன் பிள்ளைகள் படிப்பதற்கு ஒரு வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்பதற்காகவே, தேடித் தேடி இராமசாமி வந்து சேர்ந்த இடம்தான் இந்த வெலிங்டன் தோட்டம். சட்டென்று தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மாறியதால் ஏற்பட்ட மொழிக் குழப்பமா, அல்லது வெகு தூரம் பள்ளிக்குச் சென்று திரும்புவதால் தினமும் அடைகின்ற பயணக் களைப்பா, அல்லது பள்ளியில் படிப்பு ஆர்வம் குறைந்து போக இருவருமே “எல்.சி.இ” என்ற ஒன்பதாம் வகுப்பு பரிட்சையில் தோல்வியடைந்து அதோடு படிப்பை நிறுத்திக் கொண்டனர்’ என்ற ஒரு கருத்தும் பதிவாகியுள்ளது. (Mutharasan. R, 2017, P 71)

இந்நாவலில் வருகின்ற இக்கூற்றின்படி இராமசாமி தன் பிள்ளைகளுக்குப் படிப்பறிவு கொடுக்க வேண்டும் என்பதற்காகப் பல முயற்சிகளை எடுத்து அவர்களை முடிந்தவரையில் படிக்க வைத்துள்ளார். இதன் வழியாக அக்காலத்தில் மாணவர்கள் கல்வி கற்றபதற்காக அவர்கள் சந்தித்த சிக்கல்களும்தடைகளும் என்னவாக இருக்கும் என்பதை நாம் கண்டு ஆராய்ந்து குறிப்பிட்டுளோம்.

## மலாயாவில் இந்தியர்களுக்கு நேர்ந்த இன்னல்களும் அவலங்களும்

1921ஆம் ஆண்டு பிரிட்டிஷ் மலாயாவின் மக்கள் தொகை 3,584,761. இவர்களில் ஸ்பானிய காய்ச்சலால் 34,644 பேர் இறந்து விட்டார்கள். மலாயாவின் உட்புறங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை தெரியவில்லை. அதனால் 40 ஆயிரம் என்று ஒரு முழுமையான கணக்குச் சொல்லப் படுகிறது. ஏயிட்ஸ் நோய் அண்மைய காலத்து நோய். அந்த ஏயிட்ஸ் நோய் கடந்த 24 ஆண்டுகளில் கொன்ற மக்களைவிட ஸ்பானிய காய்ச்சல் 24 வாரங்களில் கொன்று குவித்தது தான் வரலாறு.

அப்போதைய புள்ளிவிவரங்களை வைத்துப் பார்க்கும் போது அதிகமாகப் பாதிக்கப் பட்டவர்கள் மலாயாத் தமிழர்கள் தாம். மற்ற சீனர்கள் சமூகம், மலாய்க்காரர்கள் சமூகங்களைக் காட்டிலும் இந்தியர்ச் சமூகம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு இருந்தார்கள்.

இரப்பர்த் தோட்டங்களில் வாழ்ந்த மலாயாத் தமிழர்கள், வெளியுலகம் தெரியாமல் கொத்துக் கொத்தாக இறந்து போய் இருக்கிறார்கள் என்று அப்போதைய ’ஸ்ட்ரெயிட்ஸ் எக்கோ’ பத்திரிகை செய்தி வெளியிட்டு உள்ளது. ஒரே சமயத்தில் அவ்வளவு பேர் இறந்து போனதால் இரப்பர்த் தோட்டங்களில் சவப் பெட்டிகளுக்கே பற்றாக்குறை ஏற்பட்டுப் போனதாம்.

தோட்டத் தொழிலாளர்கள் கிடைத்த பலகைகள் கட்டைகளைக் கொண்டு அரக்கப் பரக்க சவப்பெட்டிகளைச் செய்து இருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் ஒருவரின் உடலைப் புதைத்து விட்டு வீட்டுக்குத் திரும்பியதும் அதே வீட்டில் இன்னொருவர் இறந்து போய் இருப்பாராம். இப்படி ஒரே குடும்பத்தில் பலர் அடுத்தடுத்து இறந்து போன நிகழ்ச்சிகள் உள்ளன.

ஏன் தமிழர்கள் அதிகமாகப் பாதிக்கப் பட்டார்கள்? அதற்குக் காரணம் இவர்கள் மிக நெருக்கமாக வாழ்ந்து இருக்கிறார்கள். இரப்பர் தோட்டங்களிலும் கரும்புத் தோட்டங்களிலும் மிக நெருக்கமான வீடுகள். அது மட்டும் அல்ல, அப்போதைய இரப்பர் தோட்டத்து லயங்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டி உரசிக் கொண்டு இருந்தன. அதனால் ஒரு வீட்டில் ஒருவருக்குத் தொற்று என்றால் அந்தத் தொற்று அந்தக் குடும்பத்தவரைப் பாதித்தது. பக்கத்தில் இருந்த குடும்பத்தைப் பாதித்தது. அப்படியே மற்ற குடும்பங்களுக்கும் பரவிச் சென்று வெகு வேகமாக மற்றவர்களையும் பாதித்து இருக்கிறது. அதுமட்டுமின்றி, இந்தியர்கள் கப்பலில் பயணிக்கும் பொழுது பல இன்னல்களை அனுபவித்துள்ளனர். சான்றாக :

> *ஆமை அட்டை போல கப்பல் நீந்த நீந்த அடிப்பட்டு அடிப்பட்டு நாங்க வந்தோமய்யா (Thandayutham, 1998, P.17)*
>
> *ஆழ்கடல் ஓரத்தில் நீரோட்டம் இந்திய கப்பல்ல கஷ்டப்படும் இந்திய மக்கள் ஆய்யோ (Thandayutham, 1998, P.1)*
>
> *"...வாந்தி பேதி காசவந்து*
>
> *வயிறெரியச் செத்தாண்டி*
>
> *கப்பமேல கப்பவுட்டுக்*
>
> *கதறக் கதற எத்துணாண்டி..." ( Thandaytham, 1998, p.34 )*

கப்பலில் ஏறியவர்கள் ஒரே இடத்தில் அடைக்கப்பட்டனர். இந்நெருக்கடியில் தமிழர்கள் தள்ளப்பட்டதையும் மருத்துவ வசதியின்மை, இடையில் இறந்தவர்கள் எனப் பல இன்னல்களையும் கப்பல் பயணம் இவர்களுக்குத் தந்ததையும் மேற்காணும் பாடல்கள் தெளிவுறுத்துகின்றது.

தோட்டப்புற ஏழ்மை நிலை நல்ல உணவுக்குக் கூட வழிவகுக்கவில்லை. அரைப் பட்டினி, முழுப்பட்டினி கிடந்ததையும் கஞ்சியையும் கருவாட்டையும் உணவாகக் கொண்டதையும் கீழ்காணும் பாடல் வெளிப்படுத்துகிறது.

> *"...அய்ய சிறு பெண்பென்றால்*
>
> *மனம் இரங்காதா*
>
> *நலஞ்சு நாள் நா பட்டினியால்*
>
> *வாடுகிறேன் நான்ஞ்" (Thandayutham, 1998, p. 175)*

உணவு இல்லாமல் கூட தோட்டப்புற மக்கள் இருந்ததை இப்பாடலில் காணமுடிகின்றது.

இந்தியர்கள் மலாயாவுக்கு வரும் பொழுதும் வந்த பிறகும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பல சிக்கல்களையும் இன்னல்களையும் எதிர் நோக்கின. பால் மரம் சீவுதல் சுலபமான வேலை அல்ல என்பதனை இந்நாவலின் மூலம் தெரிந்துக் கொள்ளலாம். அதற்கு மன தைரியமும் கடுமையான உழைப்பும் தேவை என்பதனையும் அறிய முடிகின்றது.

> "அதிகாலைக் கருக்கலில் எழுந்து, படர்ந்திருக்கின்ற இருள் மூட்டத்திற்கிடையில் மரங்களைச் சீவுவதுதான் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. திடிர் திடிரென்று பாம்புகள் கால்களை உரசிக் கொண்டு ஓடும் போது, பயத்தில் உடம்பு விறைத்துக் கொள்ளும். இது தவிர, கண்ட கண்ட பூச்சிகளும் தேள்களும் வேறு தொல்லை கொடுக்கும்.
>
> எல்லாவற்றுக்கும் மேலாக, கொசுக்களின் தொல்லைதான் பெரிய தொல்லையாக இருந்தது. அடிக்கடி யாருக்காவது மலேரியா காய்ச்சல் வந்து விடும். வந்தால் தோட்டத்து ஆஸ்பத்திரியில் படுக்க வைத்து விடுவார்கள். அவ்வப்போது யாராவது ஒருவர் அந்தத் தோட்டத்திலிருந்தோ, பக்கத்து தோட்டத்திலிருந்தோ மலேரியாவுக்கோ, பாம்பு கடிக்கோ பலியாகிக் கொண்டிருந்த சோகமும் நிகழும்". (Mutharasan. R, 2017, P57)

இராமசாமி இந்தியாவிலிருந்து மலாயாக் கூலாய் இரப்பர் தோட்டத்திற்கு வந்த உடன் சந்தித்த மற்றும் அனுபவித்த சூழ்நிலைதான்

இது. ஆரம்பக்காலத்தில் இரப்பர் மரத்தை நுணுக்கமாகச் சீவுவது போன்ற வேலைகள் சிரமமாக இருந்தாலும் நாளடைவில் அந்த வேலையை நன்கு பழகிக் கொண்டார் இராமசாமி. பாம்பு கடினாலும் மலேரியா என்ற கொடிய நோய் பரவியதாலும் பலர் உயிர் இழந்தனர். அதைப்பார்த்த இராமசாமியின் மனம் உடைந்தது. அவரும் இறந்து விடுவார் என்ற பயத்தால் அல்ல. இறந்து போனவர்களின் நோக்கமும் ஆசைகளும் அவர்களோடு புதைந்ததே என்ற மனவருத்தம் இராமசாமிக்கு இருந்தது.

இப்படித்தான் நம் முன்னோர்கள் உயிர் இழந்து இரத்தம் சிந்தி இந்நாட்டிற்குப் பெருமை சேர்த்தனர். இன்று இரப்பரின் உர்பத்தியினால் பல பயன்களை நாம் அடைந்து கொண்டிருக்கிறோம். அதனைச் சுலபமாகப் பயன்படுத்தி மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால் நாம் இங்கு சுலபமாகச் செய்கின்ற ஒவ்வொரு காரியங்களுக்குப் பின்னால் நமது முன்னோர்களின் கடுமையான உழைப்பும் வேர்வையும் கனவுகளும் அடங்கி இருப்பதை எந்நாளும் மறக்கக்கூடாது. ஆகையால் எப்பொழுதும் நாம் நன்றி உணர்வுடன் செயல் பட வேண்டும்.

### மலேசிய இந்தியர்களின் இருண்ட காலம்

இந்நாவலில் தோட்டப்புற இந்தியர்களின் இடையில் தமிழ்மொழியின் மீது பற்றினை வலியுறுத்தியுள்ளது. இதற்கு காரணம், வெலிங்டன் தோட்டப்புற மக்கம் தமிழ்பள்ளிகளையும் கோவில்களையும் பேணிக்காப்பிதலில் கை கழுவாமல் இருந்ததுதான். மலேசிய இந்தியர்களின் வரலாற்றையொட்டி, 1921ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி பினாங்குத்தீவில்ஏறக்குறைய 387,509 தென்னிந்தியர்கள் இருந்தனர். அதில் தமிழர்கள் மட்டும் 39,986 பேர் இருந்தனர். இவர்கள் இரப்பர்த் தோட்டங்கள், தொடர்வண்டிச்சாலைகள் அமைத்தல் பணி, மின்சாரத்துறை, நீர்விநியோகத்துறைகளில் பெருமளவில் வேலைசெய்தனர். இதில் ஆங்கில மொழி தெரிந்திருந்த யாழ்ப்பாணத் தமிழர்களும், மலையாளிகளும், படிப்புக் குறைவான தமிழர்களுக்கு அதிகாரிகளாகப் பணியாற்றும் நிலை உருவாகியது. தோட்டப்புறங்களில் தமிழர்கள் அதிகம் நிறைந்து வாழ்ந்ததால், அங்கே தமிழ்ப்பள்ளிகள் மட்டுமே உருவாகின. தமிழர்களின் வாழ்வில் வேறு எந்தவிதமான புதிய மாற்றங்களும் ஏற்படவில்லை. தங்களின் பூர்வீகத் தமிழ்நாட்டுக் கிராமங்களில் எப்படி வாழ்ந்தார்களோ, அதைப்போலவே சாதி சம்பிரதாய, சமய வேறுபாடுகளுடன் பிளவு பட்டுநின்றார்கள். சரியான வழிகாட்டுதல் இல்லாமல் அவர்களின் வாழ்க்கை ஒரு தேகநிலை அடைந்து இருந்தது. இவைத் தமிழர்களின் இருண்ட காலம் என்றும் கருதலாம். 1929இல்தந்தை பெரியார் மலாயா நாட்டிற்கு வருகைப் புரிந்த பின் மலாயாத் தமிழர்களின் வாழ்வில் புதிய வேகமும் புதிய சிந்தனை மாற்றமும் உருவாகின. நகர்ப்புறமக்களிடம் மட்டும் அல்லாமல் தோட்டப்புறங்களிலும் பெரியாரின் சிந்தனைகளும் பேச்சுகளும் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தின. பல மொழிகள் பேசப்பட்ட இந்தியர்கள் மலாயாவில் பெரும்பான்மையினராக இருந்தாலும், அவர்கள் தமிழர்களாக இருந்த காரணத்தினால், இந்தியர்களின் பொது மொழியாகத் தமிழ் மொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதுவே, தமிழ்ப்பள்ளி அதிகமாக உருவாக காரணமாயிற்று. அகில மலாயாத் திராவிடம் கழகத்தின்படி பெரியாரின் வருகை மலேசியத் தமிழர்களின் வாழ்வில் பெரும் திருப்புமுனையாக அமைந்ததாக குறிப்பிடுகின்றனர் (Chanthiran, 1995, p.92)

### முடிவுரை

மலேசியாவின் வளர்ச்சிக்கு ஆக்கச்சக்திகளாக விளங்கியவர்களின் பட்டியலில் முதன்மை இடத்தில் இருந்தவர்கள் சஞ்சிக்கூலிகளாய் வந்த இந்தியத் தொழிலாளர்கள்தான். சஞ்சிக்கூலிகளாகத் தமிழக மண்ணிலிருந்து மலாயாவுக்கு ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்ட தமிழர்கள் காட்டையும் மேட்டையும் திருத்தினார்கள். இரப்பரைப் பயிரிட்டு நாட்டுக்கு வளத்தைத் தேடித்தந்தார்கள்.

தொடக்ககாலத்தில் இருந்தே இவர்களின் வாழ்க்கையில் தோட்ட நிர்வாகத்தினரின் கெடுபிடிகள், அடக்குமுறை ஆணவங்கள், சம்பளப் பிரச்சனைகள், கங்காணிகளின் கொடுக்குப்பிடிகள் போன்றவை இவர்களின் வாழ்வைச் சிதறடித்து வந்தன. அதனால் அவர்களின் வாழ்கைத் தரம்மிகவும் பின்தங்கிய வறியநிலையிலேயே இருந்தது. தோட்டங்களில் அடிப்படை வசதிகளற்ற சிறுவீடுகளில், விலங்குகள் போல் அடைத்து வைக்கப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டிய கட்டாய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர். மலேசியாவில் அந்தச் சஞ்சிக்கூலிகளின் வாரிசுகள் இன்னமும் உரிமைப்போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். இருப்பினும் அவர்களின் நான்காம் ஐந்தாம் தலைமுறையினர், மற்ற இனங்களுக்குச் சவால்விடும் அளவிற்கு, கல்வித்தரங்களில் வளர்ச்சி அடைந்து சாதனைப் படைத்துவருகின்றனர். ஒரு வீட்டிற்கு ஒரு பட்டதாரி எனும் நிலைமையும் பரவலாகிவருகிறது. இத்தகைய நமது முன்னோர்களின் வரலாற்றை மறவாமல் செயல்படுவது இன்றையத் தலைமுறை கையாளுவது மிகவும் அவசியம்.

## Reference


Arokiam, S. (2019). Path Dependent Development of Indian Plantation Labourers in Malaysia: Unfolding the Historical Events in Understanding their Socioeconomic Problems. Journal of Modern Thamizh Research, 1-24.

Arumugam, L. (2017). Trauma of The Tamil Laborers During The British Colonization Reflected in Malaysian Tamil Folk Songs. *Journal of Modern Thamizh Research*, 1-8.

Chanthiran, P. (1995). *MalēciyatTamiḻarkaḷiṉVaralāṟu*. Kuala Lumpur: Ashwini Publications.

Jebamoney, S. (2018). *MalēciyatTamiḻkkalvi Varalāṟu.*Chennai: International Institute of Tamil Studies.

K.Sonaimuthu. (1985). *Tan Sri Manickavasagam A Political Biography.*Penang: Arivu Chudar Publications.

Krishnavel, R. (2008). History Of Indian Rubber Plantation Workers of Malaya. *Indian Academic Research Assosciation* , 1-7.

Kumaran, T. S. (2019). *Tan Sri Manickavasagam.* Kuala Lumpur:Thamizhhavel Kosa Aravariam Publications.

Muthurasan, R. (2017). Mann Matram. Kuala Lumpur: BS Print

Navin. (2018). Meendu Nilaitha Nizalgal. Kuala Lumpur: Yaavarum Publications.

Selvaratnam, V. (2000). South Indians On The Plantation Frontier: Malaysian Proletarians or Ethnic Indians? International Institute of Social Studies, 275-293.

Thandayutham, R. (1998), Malacciya nâmmuppu[ ap pâmalka7. Chennai : Tamil Putagaalaiyam.